# தோம்புப் பதிவுகள் வெளிப்படுத்தும் கோயிற்சொத்துடமை: வடகிழக்கிலங்கை கோயிற்குடியிருப்புக்களின் பிரதான தளமாக தம்பலகாமம் - ஆதிக்கோணநாதேஸ்வரம்

செல்லையா கிருஷ்ணராசா

**ஆய்வுச்சுருக்கம்**

தென்னாசியாவில் கோவில்கள் மனித வாழ்வின் உயிரோட்டமான மையங்களாகத் திகழ்ந்து வந்திருக்கின்றன. அவை காலங்களினூடே அவ்வவ் பிரதேச மக்களது வாழ்வு முறைகளை உருவாக்கி வளர்த்த களங்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. இத்தொழிற்பாடானது தென்னாசியப் பிராந்தியத்தில் மனித நாகரிக வாழ்வின் ஆரம்பம் முதற்கொட்டே நிலைத்து வந்தமையையும் காணமுடிகின்றது. இப்பின்னணியில் தென்னாசியாவின் தென்கோடியில் விரவிக் காணப்படும் தொன்மை வாய்ந்த இந்துக்கோவில்களின் பங்களிப்புக்கள் பன்மொழி பேசும் மக்களது வாழ்வியலின் ஜீவனோபாய அடிப்படைகளை உருவாக்கிக் கொண்டிருந்தமையை இவ்வாய்வில் இடம்பெற்றுள்ள தோம்புக் குறிப்புக்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகின்றது. ஈழத்தின் வடகீழ்த்திசையில் இசைமரபோடு இறையுணர்வினைப் பரப்பிக் கொண்டிருக்கும் திருக்கோணாதமலை கோணநாதேஸ்வரப் பதியின் பண்பாட்டுப் பதிவுச் சுவடுகள் இந்து மரபோடு இணையப்பெற்ற ஒரு பன்மைப் பண்பாட்டுச் சூழ்நிலையினை உருவாக்கி வைத்திருந்த முறையினை வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக சோழர் காலப்பரப்பிலிருந்து பின்பற்றப்பட்ட கோயில் வழமைகள், காரியங்கள் யாழ்ப்பாண இராச்சிய காலத்திலும் பின்பற்றப்பட்டு, அதுவே பின்னர் ஒல்லாந்தர் காலத்திலிருந்து பதியப்பட்டுக் கிடைத்த தோம்பு ஆவணங்களாகவும் அவையே பின்னர் ஆங்கிலேயர் காலத்து கோயிற் பதிவேடுகளாவும் மாற்றுவிக்கப்பட்ட நிலையில் இன்று எமக்குக் கிடைத்துள்ளன. வடமராட்சி வியாபாரி மூலையில் வாழ்ந்து, மறைந்த அமரர் சி.நா. சொக்கநாதபிள்ளையிடமிருந்து எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய தோம்புச் சுவடிகள் ஊடாகவே திருகோணாதமலை கோணநாதேஸ்வரர் திருக்கோயிலின் கோயிற்காரியங்கள் மற்றும் அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் கொண்டதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பின்பற்றப்பட்ட ஆய்வு முறையானது வரலாற்று மூலங்களுடான விபரண ஆய்வு முறையியலாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள் :** திரிலோகண பல்லவ வம்சம். சிலப்பதிகாரம். மணிபல்லவம். மண்டலாய். முக்கந்தர். தோம்பு. தொண்டு - தொழும்பு. பராமரிப்புக்காரர்கள். பற்றுச்சீட்டு. இருபாகை முதன்மை. திருவாசி. நேர்க்கடன்.

## 1. அறிமுகம்

இத்தீவின் பண்பாட்டுப் பரப்பிலும் நாகரிக வாழ்விலும் ஆதிக்கோண நாதேஷ்வரப் பதியின் சுவடுகள் காலத்தினாலும் அழிக்கப் பட முடியாதவனாக உள்ளன. இதற்கான அடிப்படையானது காலத்தின் வளர்ச்சிக் கட்டங்களூடாக அம் மையம் சிறப்பாகப் பெற்றிருந்த உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிபச் சூழலே ஆகும். (சரவணபவன்,க., 2003,ப.12). பல இனத்தவர்களும், பன்மதத் தவர்களும், பல்வேறு நாட்டினரும் ஒருங்கே ஈர்க்கப்பட்டு வந்த மையமாதலால் கோணநாதஸ்வரப் பதியின் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியில் அம் மையம் ஒரு சர்வதேசப் பண்பாட்டு வயப்பாட்டின் மரபின் வளர்ச்சிப் போக்கினைப் பெற்றுக் கொள்ளக் காரணமாயிற்று. உள்நாட்டு மாறுதல்களுடன் இவ்வளர்ச்சிப் போக்கும் இணைந்து ராஜீய நிர்வாக உருவாக்கத்தின் களமாகவும் அம்மையம் வளர்ச்சி பெறக் காரணமாயிற்று. அப்பின்புலத்தில் கோணநாதேஸ்வரப் பதியையும், அதன்

வளர்ச்சி நிலைகளையும் சர்வதேச சமூக மட்டத்திற்கு எட்ட வைத்த நிகழ்வுகளும் நடந்தேறின. (சரவணபவன், க., 2003, ப.13). அந்நிகழ்வுகள் உள்ளிட்ட வளர்ச்சி நிலைகளின் வெளிப்பாடானது பண்பாட்டு அலைகளாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மக்களால் உள்வாங்கப்பட்டு நிலைநிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. அவ்வாறு நிலைநிறுத்தி வைக்கப்பட்டனவற்றுள் இன்று எமக்குக் கிடைப்பவை அத் தலத்தைப் பற்றிய மான்மிய இலக்கியங்கள், தேவாரப்பதிகங்கள், கல்வெட்டுக்கள், விக்கிரகங்கள், தோம்புப் பதிவுகள், வெளிநாட்டுப் பயணிகளின் பிரயாணக் குறிப்புக்கள் என்பனவாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு கோணநாதேஸ்வரப்பதியின்தோற்றம், வளர்ச்சி, மற்றும் அதன் சொத்துக்கள், வருமான நிர்வாகப் பகிர்வு முறைகள் போன்றவற்றை ஆராயமுடிகின்றது. இக்குறிப் பிட்ட கோவிலினது தொண்டர்கள், சொத்துடமை, கோயிற் திருக்காரியங்கள் போன்றவற்றை அவதானிக்கும்போது பல்லவர், சோழர்கால இந்துக்கோயில் நிர்வாக முறைகள் திருக்கோணேஸ்வரத்தினை மையப்படுத்திய வகையில் ஆங்கிலேயர் காலம் வரைக்கும் பின்பற்றப்பட்டு வந்திருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அவ்வகையில் ஈழத்துப் புராதன இந்துப் பண்பாட்டுச் சூழலின் பின்னணியில் (குணசிங்கம், செ., கோணேஸ்வரம்., 1973, ப.12, 115-122) ஆ. வேலுப்பிள்ளை, திருவுடையாள், 2013, வடகிழக்கிலங்கையின் பாரம்பரியத் தேடலில் கோணநாதேஸ்வரப் பதியின் சுவடுகள் உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்டு பண்பாட்டுப் பொக்கிசமாகக் காணப்படுவது என்பது இன்றைய காலகட்டத்தில் எடுத்தாராயத்தக்க ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

### தென்னிந்திய மரபில் ஆதிக்கோண நாதேஸ்வரம்

ஈழத்து நில வரம்பிற்குள் உட்பட்ட இடப்பெயர் - பெயர்த்தோற்றம் பற்றிய ஆய்வுகள் பெருமளவிற்கு இன்று பாளி-சிங்கள, வடமொழிவழிவந்த உருத்தோற்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப் படுகின்றன. அதேநேரத்தில் ஈழத்திற்கு மிகவும் அண்மித்த பெருநிலப் பரப்பான தமிழகத்தின் அல்லது தென்னிந்தியக் குடியமைவின் பண்புகளும் மொழிப்பிரயோகப் பின்னணியில் வரலாற்றுக் காலத்திலிருந்தே வடகிழக்கிலங்கையின் குடியமைவின் போக்கினை நிர்ணயித்து வந்துள்ளன என்பதனையும் மறந்துவிடலாகாது. வடக்கு மற்றும் வடகிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்ற தொல்லியல் ஆய்வுகள் அவ்வுண்மையை தெளிவுபடுத்தியுள்ளன (குணசிங்கம், செ., 1973, ப.). தென்னிந்தியக் குலங்குடிகளின் தன்மைகள் - ராஜீய - வாணிக முறைமைகள் ஈழத்தை நன்கு பாதித்து சென்றுள்ளன என்பதனை ஆய்வறிக்கைகள் நிரைப்படுத்தியுள்ளன. திருக்கோணேஸ்வரப் பதியின் பெயர்த்தோற்றம் பற்றிய ஆய்வும் இப்பின்னணியிலேயே நோக்கப்படுதல் வேண்டும். கொகர்ண, கோக்கண்ண, கோகர்ண, கோகணம், கோனாமலை, கொட்டியாரம் போன்ற இடப்பெயர் குறித்த பதங்கள் திருக்கோணாதமலையையே குறித்து நின்ற சொற்றொடர்களாகும்.

### திரிலோகண பல்லவ வம்சமும் கோணேஸ்வரப் பதியும்

இதுவரையில் திருக்கோணேஸ்வரம் என்ற பெயர்த்தோற்றம் தொடர்பாக வெளிப்படுத்தப்படாத ஓர் அம்சத்தினை இங்கு தருவது பொருத்தமாகின்றது. இராமச் சந்திர தீட்சிதர் சிலப்பதிகாரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு வரைந்த தனது அறிமுகவு ரையில் திரிலோகண பல்லவ வம்சத்தினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். (Ramachandra Dikshitar, V.R., 1939:10). கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்த திரிலோகண பல்லவ வம்சத்தின் இடம் தாயகம், தலைநகர், அதிகார வரம்பு பற்றிய எந்த விடயங்களும் இன்னும் தென்னிந்திய வரலாற்று வெளிச்சத்திற்குள் அகப்படவில்லை எனக்குறிப்பிட்டுள்ள தீட்

சிதர் சங்க காலத்து சோழ இளவரசனான கரிகால்வளவனது ஆட்சிக்குச் சற்றுப் பிற்பட்டதாக இவ்வம்சம் வாழ்ந்திருக்க வேண்டும் என முடிவு கொள்கிறார். அவருடைய இத்தகைய ஓர் அனுமானமானது ஆதிப் பல்லவ வம்சம் ஒன்றினது ஈழத்தொடர்பின் பின்னணியில் திருக்கோணேஸ்வரத்தின் பெயர்த் தோற்றத்திற்கான ஊற்றினைக் கண்டுகொள்ள வழிவகை செய்கின்றது (Ramachandra Dikshitar, V.R., 1939:15). திருக் கோணேஸ்வரப் பிராந்தியத்தில் இருந்து அதிக எண்ணிக்கையில் பெற்றுக் கொள்ளப் பட்ட பல்லவர் காலத்திற்குரிய வடமொழி மற்றும் பல்லவ - கிரந்தக் கல் வெட்டுச் சான்றுகள், மற்றும் தொல்லியல் சான்றுகள் எமக்குத் திரிலோகண பல்லவ வம்சத்துடன் திருக்கோணேஸ்வரத்தினைத் தொடர்புபடுத்தி பார்ப்பதற்கு உதவுகின்றன (Ramachandra Dikshitar, V.R., 1939:30 ).

திரிலோகண பல்லவ வம்சமானது சங்ககாலத்து சோழ இளவரசனான கரிகால் வளவனது ஆட்சிக்குப் பிற்பட்டது என்பது இராமச்சந்திர தீட்சிதருடைய கருத்தமைவாகும். சிலப்பதிகாரத்தின் தோற்ற காலமும் ஈழத்து திரிலோகண பல்லவ வம்ச காலமும் ஏறக்குறைய சமகாலமாகலாம். செ. இராசநாயக முதலியார் முன்வைத்துள்ள "மணிபல்லவம் - பல்லவ வம்சத்தின் தாயகம்" என்ற கோட்பாடும் ஓரளவிற்கு இராமச்சந்திர தீட்சிதருடைய திரிலோகண பல்லவ வம்ச காலத்தினை எட்டியதாக இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ள குறிப்பொன்றின்படி, சோழநாட்டிலிருந்து படையெடுத்துவந்த இளவரசன் ஒருவன் 36000 இளைஞர்களைப் பிடித்துச் சென்றான் என்ற செய்தி கரிகாலன் என்ற சோழ இளவரசன் காவிரிக்குக் குறுக்கே கல்லணை கட்டுவதற்காக இலங்கையிலிருந்து நீர்ப்பாசனத் தொழில்நுட்ப வல்லுநர்களை (சிங்கள இளைஞர்களை) பிடித்துச் சென்ற சம்பவத்தினைக் குறிப்பதாகும் என்பது வரலாற்றாசிரியர்களது கருத்தாகும். இக்காலத்தில் திருகோணமலை வணிக நடவடிக்கைகளில் மிகவும் முக்கியம் பெற்றிருந்த துறைமுகநகராக விளங்கி, பின்னர் திரிலோகண பல்லவ வம்ச காலத்தில் கோணேஸ்வரப் பதியின் கீர்த்தி மேலோங்கிய நிலையில் இத்துறைமுகம் பாடல் பெறுவதற்கும் காரணமாக விளங்கியது.

**திரிலோகணம் : ஆதிபல்லவ வம்சத்தின் துறைமுக நகர்**

செ. இராசநாயகம் முன்வைத்த ''மணி பல்லவம் : பல்லவரது தாயகம்'' என்ற கோட்பாடானது படிப்படியாகத் தொல்லியற் சான்றுகள் வாயிலாக ஈழத்தில் வலுவடைந்து கொண்டுவரும் இக்கட்டத்தில் "திரிலோகண பல்லவர்" பற்றிக் கிடைத்த தகவலானது ஈழத்து வரலாற்று ஆய்விற்குப் புதிய சான்றாக அமையும். பல்லவப் பண்பாட்டின் வெளிப்பாட்டிற்குரிய சின்னங்களாக நாகதீப கலசங்கள் இம்பர்சிட்டி - வியாபாரிமூலையில் இருந்து அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தப்பட்டன. வியாபாரி மூலைக்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் இடையே மிக நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. புலோலி - பல்லப்பைக் கிராமத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பல்லவர் பாணிக்குரிய போதி மாதவனின் சிரசு கிடைத்திருப்பது இப்பிராந்தியத்தில் பல்லவர் கலை மரபின் செறிவினைக் காட்ட உதவுகின்றது எனலாம் (கிருஸ்ணராாசா, செ., தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும் , *2015., ப.236).*

வடமராட்சி கிழக்கில் உள்ள கரையோரக் கிராமமான அம்பன் என்ற பெயர் உடைய குறிச்சிப் பிரிவு தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்றான யாவாத் தீவினது மையப் பகுதியில் காணப்படுகின்றது. வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணியை அடுத்துக் காணப்படும் மண்டலாய்ப் பிள்ளையார் கோவில் மத்திய யாவாவிலுள்ள பௌத்தப் பாரம்பரிய வணக்க

முறைகளுடன் தொடர்புபட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவையாவும் பல்லவப் பண்பாட்டின் கடல் கடந்த செல்வாக் கினடி யாகவே ஈழத்திலும் நிலை பெற்றிருந்தன. இவற்றுக்கெல்லாம் தொடர்புகளைஏற்படுத்தித் தந்த வட கிழக்குக் கரையோரத்துறை முகங்கள் யாவும் பல்லவ வம்சத்தின் மேலாதிக்கத்தின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது என்றால் அது மிகையாகாது. அவ்வகையில் வட கிழக்குக் கரையோரத்துறைமுகங்களுள் திருக் கோணேஸ்வரம் வணிகர்களினால் மிகவும் விரும்பப்பட்டதாகவும் இருந்து வந்துள்ளது. அவ்வகையில்திரிலோகணபல்லவவம்சத்துடன் தனது வளர்ச்சியையும் செல்வாக்கினையும் இணைத்து ஒரு சிறந்த துறைமுக நகராகவும் அதே நேரத்தில் புனித ஸ்தலமாகவும் மாறியி ருந்த திருக்கோணேஸ்வரம் இலங்கை மக்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்கினைப் பெற்றுக் கொண்டதில் வியப்பேதும் இருக்க முடியாது (பல்வராச சேகரன், 2007., ப. 53)

**ஈழத்துப் பல்லவ வம்சத்தின் தளமாக தம்பலகாமம்**

தமிழகத்தில் களப்பிரரின் மேலாதிக்கம் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் ஈழத்தின் கிழக்குக் கரையில் திரிலோகணம் எனப்பெயர் பெற்றிருந் திருக்கோணேஸ்வரம் ஒருதுறைமுக நகராகப் பொலிவுற்றுச் சிறப்படைந்திருக்க வேண்டும். களப்பிரரின் தாக்கத்திலிருந்து ஆதி பல்லவ வம்சம் தம்மைப் பாதுகாத்து வளர்த்தெடுத்துக் கொண்ட ஒரு மையமாகவும் அமைந்திருக்க வேண்டும். பல்லவங்க, பல்லவபொக்கு, பல்லவராயன்கட்டு போன்ற மையங்கள் திருக்கோணேஸ்வரத் திருப்பதியின் அண்மித்தகுடியிருப்புக்களாகும். இவை யாவும் பல்லவர் காலத்து வாணிப மையங்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது. இவ்மையங்கள் யாவும் முக்கந்தர் என்ற உயர் தலைமையின் கீழ் பெரு வாணிப நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருந்தன என்பதனை இலக்கியச் சான்றுகளினூடாகக் கண்டுகொள்ள முடிகின்றது. (மோசஸ் பொன்னையா, நாடார் வரலாறு., 1978, ப. 58)

முதற்பெயரான "திரிலோகணம்" என்பதில் உள்ள ''கணம்'' பெயரீறு வணிகக் கணத் தினைச் சுட்டுவது எனக்கொண்டால் அதனை விசேடித்து நிற்கும் ''திரிலோ'' என்பது திரைலோக்கிய என்ற பதத்தின் மருவுப் பெயராகவோ அமையும் எனலாம். இப் பெயர் பொதுவாக அரச வம்சத்தைச் சேர்ந்த பெண்களின் பெயராகவோ அன்றி ஓர் இனப்பெயராகவோ குறிக்கப்படுதலையும் காணலாம். ''திரைகடல் ஓங்கி நித்திலங் கொழிக்கும் கோணமாமலை" யின் பெயர்த் தொடக்கம்திரைலோக்கிய கணமாகிப் பின்னர் திரிலோகணம் என மருவிற்று என்று கொள்வதே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

அவ்வகையில் ''திரிலோகணம்'' என்ற பெயர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் நன்கு நின்று நிலைபெற்ற ஒன்று எனக் கொள்வது இவ்வாய்வுக்குப் பொருத்தமாகின்றது. இப்பின்னணியில்திருக்கோணேஸ்வரம் பற்றிய பிற்பட்ட காலவரலாற்றினையும் கிடைத்த தோம்பு ஆவணங்களூடாகவும் ஆராய முடிகின்றது. திருக்கோணேஸ்வரப் பதியும் முக்கந்தர் என்ற வாணிபத் தலைவர்களினால் நிர்வகிக்கப்பட்ட செய்தியை பல்லவர் கால சமூக வரலாறு உறுதிப்படுத்துவதனையும் மோஸஸ் பொன்னையா தனது நடார் வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (தம்பசிட்டி - வியாபாரிமூலையில் வாழ்ந்து அமரத்து வமடைந்த கந்தயினார் என்ற நிலப்பிரபு பல்லவ வம்சத் தொடர்பு வழிவந்த முக்கந்தர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. கந்தயினாருக்கு உரிய ஆதனமாகக் காணப்பட்ட மிகப் பழமை வாய்ந்த தம்பசிட்டித்துறைமுகத்தின் மருங்கில் உள்ள பிள்ளையார் கோயில் மடமொன்றில் பல்லவர் கால பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது (கிருஸ்ணராசா, செ., தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும், 2015, ப.268).

**தோம்பு ஆவணமும் தம்பலகாமப் பதியின் சொத்துக்களும்**

திருகோணமலை கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலின் 'தொண்டு' - 'தொழும்பு' பற்றிய பல விபரங்களைக் கோணேசர் கல்வெட்டு போன்ற இலக்கியச் சான்றுகளில் விபரமாக எடுத்துக் குறிப்பிடப்பட்டிருந்தும், போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப் பெற்ற கலையழிவுக் கொள்கைக்குப் பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலைப் பற்றிய தகவல்கள் குறிப்பாக தம்பலகாமம் சிவன் கோவிலைப் பற்றியதும் அதற்குரிய தேவஸ்தான வயல் நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் யாவும் ஓலைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டன. அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவேடுகளாக முத்திரைகள் குத்திப் பாதுகாக்கப்பட்டுள்ளன. பின்னர் அத் தோம்புச் செய்திகள் யாவும் ஆங்கிலேயர் காலத்தில் கோயிற் பதிவுப் புத்தகங்களில் நிரைப்படுத்தப்பட்டு கோவைப் படுத்தப்பட்டன. கி.பி. 1800ஆம் ஆண்டளவில் கோயிற்புத்தகங்கள் (Temple Register) கச்சேரி ரீதியாக இத்தகைய பாவனைக்காக இடப்பட்டுள்ளன.

இந்த வகையில் ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய தோம்புகளாகவும் அவை பின்னர் படியெடுக்கப்பட்டு இருந்த ஆவணப்படிவங்களாகவும் (உறுதிகளாகவும்) நீண்ட காலமாக தம்பசிட்டி - வியாபாரிமூலை யிலுள்ள அமரர் சொக்கநாதம்பிள்ளை அவர்களின் வீட்டில் பாதுகாக்கப்பட்டிருந்தன. (அவரது இல்லம் முழுவதுமே ஓர் ஆவணகாப்பக மையமாக விளங்கியிருந்தது. அவரது அமரத்துவத்தின் பின்னர் அந்நிலையானது முற்றாகவே சீர் குலைந்து விட்டது. அந்த வகையில் நாம் ஏற்கனவே அவருடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பின் அடிப்படையிலே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணப்பிரதிகளைப் பார்த்து படியெடுப் பதற்கு வாய்ப்பாக இருந்தது.) இவ்வாறு சேகரிக்கப்பட்ட வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தம்பலகாமம் ஆதிக் கோணநாதேஸ்வரர் கோயில் நிர்வாகம் தொடர்பான குறிப்புக்களை விபரண ரீதியாக இங்கு தரமுடிகின்றது. அவற்றை வரலாற்று மூலம் என்ற வேரடிப்படையில் ஈழத்தமிழரது பண்பாட்டு எழுத்தியலுக்கு உதவும் ஆதாரமாகக் கொள்வதற்கும் வாய்ப்பாகின்றது.

**தோம்புப் பதிவின் தொடக்கவுரை**

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோயில் தொடர்பான சாதனங்கள் யாவற்றிலும் வரலாற்றுப் பெறுமதிமிக்க தொடக்கவுரையாக இத்தோம்பின் ஆரம்பம் இடம்பெற்றமையை அவதானிக்க முடிகின்றது. திருகோணமலையைப் பற்றிய வரலாற்றாய்வுக்கு அப்பகுதி பெருமளவிற்கு உதவுவதாகவுள்ளது. இப்பகுதி பின்வருமாறு: -

*1. ''திருக்கோணாதமலையைச் சேர்ந்த தம்பலகமக் கோயிற் குடியிருப்பில் சைவ சமய பிரபல்யமாய் விளங்கும் கோண நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு ...*

*2. சூரிய - சந்திர - அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரிய குலத்து மனுநீதிச் சோழமஹாராசன் மரபிலுதித்த கஜவாகுமஹாராசாவின் தெக்ஷணகைலாயம் கோண நாதேஷ்வர சுவாமி கோவிலுக்கு...*

இவ்வாறு பதியப்பட்டுள்ள முகப்புரை பாரம்பரியமாகவே உள்வாங்கப்பட்டு வந்த வரலாற்று மரபினைத் தோம்புகள் வெளிப்படுத்துவதாக உள்ளன. கந்தளாயில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களில் குளக் கோட்டனைப்பற்றியதும் கஜவாகு மன்னனான இரண்டாம் கஜவாகு பற்றியதுமான செய்திகளில் இத்தோம்பில் இடம்பெற்றுள்ள சில செய்திகள் இடம்பெற்றிருப்பது மேலே கூறப்பட்டவற்றுடன் ஒப்புநோக்கி

மேலும் ஆராயத்தக்கதாகும். தோம்பிலும் உரிமைச்சாசன பட்டயமொன்றிலும் பதியப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகள் பின்வருமாறு தொகுத்து வகுத்துத் தரப்படுகின்றது. அவை பின்வருமாறு :

"......எப்பொழுதும் பூசகராகவும், முதன்மையாகவும் "இராசகுலகுரு" என்னும் சகல பொருட்களையும் அதிகாரமாக நின்று நடப்பித்து அவ்வாதனங்களின் வருமானத்தில் பத்திலிரண்டு பங்கும் பிரயோஜனம் தங்களுபயோகங்களுக்கென்றும்எம்முன்னோர் சாதனம் எழுதிக் கொடுக்கப்பெற்றவர் ஆகையாலும் அவ்வுரித்தின் பிரகாரம் கோணநாதேஷ்வரப் பெருமானின் கல்வெட்டிலும் புராணத்திலும் சொல்லிய..."

"...குறித்த கோவிலுக்கும், கோவிலின் கல்வெட்டிலும், புராணத்திலும் சொல்லிய இருபாகை முதன்மைக்கும் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருப்பவர்களாகிய கனக சுந்தரப் பெருமாள் கோயிற் பராமரிப் புக்காரர்கள், கரணம், அடப்பற் தாளத்தார், வரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப்பகுதி முதலிய பரிசாரகர்களைக் கொண்டு குறித்த கோவிலின் கல்வெட்டிலும், வேதம், ஆகமம், புராணம் ஆகியவற்றிலும் சொல்லிய படியும் வழமைப்படியும், மேற்குறித்த ..."

"... குறித்த கோவிலின் ...மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து அக்கோயிலில் நடக்க வேண்டிய பூசை, திருவிழா முதலியவற்றையும், கந்தளாய்க் குளத்திலும், மாகாமத்திலும், காலத்துக்குக் காலம் நடக்க வேண்டிய வேள்விகள், கிராம சாந்திகள் முதலியவற்றையும் திருக்கோணாதமலை கொட்டியாரப்பற்றில் கங்குவேலி சிவன் கோவில், மேற்படிப்பற்றில் வெருகல் சித்திர வேலாயுதசுவாமி கோவில் ஆகிய அவைகளின் பூசை திருவிழாக்களையும் ஆடி அமாவாசைத் தீர்த்தங்களுக்குரிய கீர்த்தியங்களையும் மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து செய்தும் செய்வித்தும் வருபவர்களுக்கும் வேதம், ஆகமம், புராணம், கல்வெட்டில் சொல்லிய பிரகாரமும் வழமைப்பிரகாரமும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்விப்பதற்காக" (33 ஊர்களில் உள்ள 33 பேர்களை) "பராமரிப்புக்காரர்களாக நியமிக்கத் தீர்மானித்து மேற் சொல்லப்பட்ட பேர்வழிக்காரர்களைபின்னால்சொல்லப்படும் காரியங்களை நடத்துவதற்காக ... இத்தால் பெயர் குறித்து நியமித்து ஏற்படுத்தி அதிகாரம் கொடுக்கின்றேன்"

**தம்பலகாமப் பதியின் தொண்டு - தொழும்பாலளர்களது அதிகாரங்கள்**

அ) குறித்த கோவிலுக்குத் தொழும்பாளராகிய கனகசுந்தரப் பெருமாள் கோயிற் பராமரிப்புக்காரர், கங்காணம், அடப்பன் தாளத்தார், பாரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப்பகுதி முதலிய பரிசாரர்களாகிய இவர்கள் குறித்த கோண நாதேஷ்வர சுவாமி கோயிலுக்கும், இருபாகை முதன்மையாகிய ......பின் சந்ததியாருக்கும் குறித்த வேதம், ஆகமம் புராணப் பிரகாரமும் கோயிலின் கல்வெட்டுப் பிரகாரமும் வழமைப் பிரகாரமும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களைக் கொண்டு விதிப்படியும் முறைப்படியும் செய்விக்க.

ஆ) குறித்த கோணாதேஸ்வர சுவாமி கோவிலினதும் கங்குவேலிச் சிவன் கோவிலினதும் வெருகல் சித்திர வேலாயு தசு வாமி கோயிலினதும் கந்தளாய்ப் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவற்ற ஆதனங்களையும் ... குத்தகை கொடுக்கவும் குத்தகைப் பணங்களை அறவிடவும் பற்றுச் சீட்டுக் கொடுக்கவும் அந்தந்தக் கோவில்களின் வருமானங்களிலிருந்து அந்த(ந்த)க் கோவில் களின் பூசைகள் ஆடி அமாவாசைத் தீர்த்தங்கள், கிராம சாந்திகள், வேள்விகள் இன்னும் அநேக வேதாகாரச் சடங்குகளையும் குறித்த கோவிலின் திருப்பணிகளையும் வேதம் - ஆகமம் - புராணம் - கல்வெட்டு வழமையாகிய இவைகளுக்கு அமையச் செய்விக்கவும்.....

இ) குறித்த கோவில்களின் தொகுப்பாளர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினால் அவர்களை... நட்டம் அல்லது நட்டங்களை அறவிடவும், அவர்களைக் கொண்டு குறித்த கருமங்களை விதிப்படி செய்விக்கவும் மன இணக்கமாய் செய்பம் பண்ணி வைக்கவும், அப்படிக் குற்றம் செய்தவர் களை நீக்கி அவர் அல்லது அவர்களின் இடத்துக்குப் பதிலாக அக்குடும்பத்திலே பதிலாளிகளைத் தெரிவு செய்து நியமிக்கவும் அவ்வண்ணம் நீக்கப்பட்டவருக்குக் கோவி லால் விடப்பட்டிருக்கும் காணிகளை அல்லது வருமானங்களை அவர்களிலிருந்து எடுத்துப் பதிலாக வைக்கப்பட்டவர்களுக்கு ஒப்புக் கொடுக்கவும்.

ஈ) இருபாகை முதன்மையாகிய ...... ..... பின் சந்ததி அல்லது சந்தானங்களுக்கு உதவி தேவை என விரும்பிய காலங்களில் உதவிக்காக வந்திருக்கும் பூசகர், குருமாரர்கள், சாதகாசாரியார், அலங்கிரு தாசாரியார், போதகாசிரியார் முதலிய இவர் கள் இருபாகை முதன்மைக்குத் தேவையான உதவிகளைச் செப்பமாய்ச் செய்ய வேண்டும். அவ்வண்ணம் செய்யாமலிருந்தால் அல்லது குறித்த கோவிலினுடைய பத்திலெட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது பத்திலிரண் பங்கு ஆதனத்திலிருந்து கொடுபட்டால் இருபாகை முதன்மையாகிய ஆதனங்களைக் குறித்த தத்துவக்காரர் அவர்களிருந்தெடுத்து செய்யத் தவறினால் இருபான்மை முதன்மையாகிய அவர்களுடைய மூன்றில் இரண்டு பங்கால் அல்லது ........... பின் எனது பிற்சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பத்திலெட்டுப்பங்கு ஆதனத்திலிருந்து கொடுக்கப்பட்டால் குறித்த கோவிலுக்கும் சேரும்படி செய்ய வேண்டும்.

உ) குறித்த கோயில்களுக்குரிய ஆதனங் களைப் பற்றிய நீர்ப்பாய்ச்சல் வட்ட விதானையிடம் இருக்குமிடாப்பில் சொந்தக் காரன் என்ற பந்தியில் முதன்மையாகிய நானே குறித்த கோயில்களின் வகைக்காக கையொப்பமிட வேண்டியிருப்பதனால்குறித்த பந்தியில் மேற்சொல்லிய அவர்களில் எவராவது ஒருவர் அல்லது இருவர் குறித்த முதன்மையின் வகைக்காக கையொப்பமிடுவதாக...

ஊ) ...மன இணக்கமாகக் குறித்த கருமங்களை நடப்பிக்கத் தவறினால் அல்லது அவர்களுக்கிடையில் ஏதும் வாக்குவாதம் வந்தால் எவராவது இறக்கச் சம்பவித்தால் அல்லது வேறெவ்வகையாகவேனும் ஒருமித்து அல்லது அவர்களிலாதிக்கத்திலிருப்போர்... அவர்களுக்குள் நான்கு பேருக்கு அல்லது மூன்று பேருக்கு அதிகாரம் கொடுத்து குறித்த கருமங்களை அல்லது அவைகளின் எப்பகு தியையேனும் செய்விக்க... இவர்களுக்கு அதிகாரமுண்டு...

எ) குறித்த கோவில்களினூடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்ட - சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினடமாக வைக்க வேண்டியது. குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று இருபாகைமுதன்மையாகிய என்னிடமும் மற்றது... ஒருமித்து நியமிக்குமொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர்க்கடனுக்காக வரும் ஆடு, மாடு கோழி முதலியவைகளை இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றைச் செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

ஏ) குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டுவஷ்திரங்கள், திருவாசி முதலிய சகலமும் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்கள் சகலமும் கோவிலின் இருப்பு வீட்டில் இருக்கும் படி செய்ய வேண்டும்.

ஐ) குறித்த கோவில்களின் வருமானங்களைப் பற்றிய வரவு - செலவுக் கணக்குகளை வெளிப் படுத்தும்படி கேட்கும் காலம் இவர்கள் அக்கணக்குகளை வெளிப்படுத்தவும் கணக்குக் கொடுக்கவும் இருபாகை முதன்மையாகிய ................. சந்தவி அல்லது சந்தானத் துக்கும் பாத்திரவாளிகளாயிருத்தல் வேண்டும்.

ஒ) குறித்த... கோவில்களினூடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்டு - சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்க வேண்டியது குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று - இரு பாகை முதன்மையாகிய என்னிடமும் மற்றது ...ஒருமித்து நியமிக்கு மொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியவைகளை இன்னும் வேற சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக்கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றை செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

ஓ) தம்பலகாம பதிக்குரிய ஆதனங்களின் எல்லைகள்

1. திருகோணமலை தம்பலகாமப் பற்று தம்பலகாமம் கோணநாதேஷ்வரசுவாமி கோவிலாதனமாய் அக்கோயிலின் ஏக பூசகரும் இருபான்மை முதன்மையும் என்னும் அதிகார முறைப்படி எனது உரிமையாட்சியின் காணி கீழ்மாகாணம் திருக்கோணாத மலை டிஸ்திரிக் தம்பலகாமப் பற்றுமாக்கை வெளியிலிருக்கும். பெத்தராசி வயல் என்னும் ஒரு துண்டு நிலம் - இதற்கு எல்லை வடக்கும் கிழக்கும் மாக்கைத்திடல் தெற்கு குடமிருட்டி யாறு மேற்கு ஆறு இவ்வெல்லை பூண்டு காணியின் சொரியலாய் ஆறிலொரு பங்கு
2. தம்பலகாமம் மாக்கை வெளியிலிருக்கும் பெரிய ஆண்டி வெட்டுவன் என்னும் ஒரு துண்டு வயல் நிலம், எல்லை கிழக்கு வடக்கும் வெட்டுக்காடு மேற்கு ஆறு தெற்கு வீரக்குட்டிக்கும் கணவதிப்பிள்ளைக்கும் உடைய வயல்.
3. தம்பலகாமம் மாக்கை வெளியிலி ருக்கும் சின்னாண்டி வெட்டுவன் என்னுமொரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் வடக்கும் கந்தர் கீத்து மேற்கு கோணநாயகர் கோவில் பிற்பாகைக்குரிய முதலியார் வயல், தெற்கு முத்துக்குமார சுவாமி வயல்.
4. தம்பலகாமம் மாக்கை வெளியிலிருக்கும் காட்டுக்கும்பியன் வயல் என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் தெற்கும் கோணநாயகர் கோயில் வயலும் மறுபேருடைய வயலும் மேற்கு வாய்க்கால் வடக்கு பச்சன் பவரை.
5. தம்பலகாமம் மாக்கை வெளியிலிருக்கும் பெரிய வெட்டுக்காடு என்னுமொரு துண்டு வயல் நிலம் மேற்கு முடிக்குரிய தரையும் உதுமாலெவ்வை காஜியாரின் தரையும் வடக்கு பச்சன்பவரை தெற்கும் கிழக்கும் வெறுவயல்.
6. தம்பலகாமம் பற்ற வெளியிலிருக்கும் ஓலுக்குனி என்னும் ஒரு வயல் நிலம் கிழக்கு வீரக்குட்டியின் சுவாத்தியர் வரை வடக்கு ஆறு மேற்கு அப்புக்குட்டி மரிக்காரருக்கும் வேகன் கணபதிப்பிள்ளைக்குமுடைய வயல் தெற்கு பக்கீர்த்தம்பியின் கரையான் வயல்.
7. தம்பலகாமம் பற்றவெளியிலிருக்கும் கரையான் வெட்டுக்காடு என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு கோணநாயக்கர் கோயில் பிறப்பாகைக்குரிய மந்தணடைக்கீத்து வடக்கும் மேற்கும் ஆறு தெற்கு சபாபதிப் பிள்ளையின் தரை. தம்பலகாமம்

பண்டார வெளியிலிருக்கும் கொண்டு முனைப்பகுதி என்னும் ஒரு துண்டு வயல் நிலம் கிழக்கும் தெற்கும் ஆறு மேற்கு கோணநாயக்கர் கோயிலுக்குரிய அட்டமயோடைப்பகுதி வயல் வடக்கு கோயிற் பிறப்பாகைக்குரிய மணற் பகுதி வயல்.

8. தம்பலகமம்பண்டார வெளியிலிருக்கும் பிரமணன் கீத்து என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை வடக்கு கட்டை வயல் கிழக்கு வல்லிபுரத்தின் தரை தெற்கு கோணநாயகர் கோயில் வயல் மேற்கு வாய்க்கால்.

9. *10)* தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும் உப்புக்குழி என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை வடக்கு சிறுபயனி ஆறு மேற்கு பொன்னுச்சாமி குருக்களின் தரை தெற்கு கோயில் வீதி கிழக்கு கோயிலுக்குரிய தரை.

10. தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும் மாந்தோட்டடியான வயல் நிலம் எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப்பள்ளம் வடக்கு கோயிலுக்குரியதௌவில்வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் சின்ன அணை வெட்டுவான்வயல். வயல்நிலம்எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப் பள்ளம் வடக்குக் கோயிலுக்குரிய தௌவில் வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் தெற்கு சின்ன அணை வெட்டுவான் வயல்.

11. தம்பலகமம்பண்டாரவெளியிலிருக்கும் சின்ன அணை வெட்டுவான் பெரிய அணைவெட்டுவான் என்றழைக்கப்படும். ஒரு துண்டு வயல் எல்லை கிழக்குக் கோயில் வயலும் ஆறும் வடக்கு மாந்தோட்டியான வயலும் காதர் தாமோதரம் பிள்ளையின் வயலும் தெற்கு ஆறும் பழனியப்பரின் தரையம் மேற்கு கோயில் பிரம்பருங்காட்டுக் கீத்து.

12. தம்பலகமம் சம்பந்துறையில் பிராமணன் கீத்து என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு வெட்டுக்காட்டு தரை மேற்கு கட்டை வயல் வடக்கு மூக்கறுத்தலைவரை தெற்கு பண்டாரியாக் கீத்து

13. தம்பலகமம் பண்டார வெளியில் பெரிய பகுதி மணற்பகுதி என்றழைக்கப்படும் ஒரு துண்டு தரை வயல் தரை எல்லை வடக்கு கட்டாடிக் கீத்து என்றழைக்கப்படும் வயல் தெற்கு கொட்டுமுகப்பகுதி வயல் கிழக்கு சிறு பயனி ஆறு மேற்கு களத்துத்தரை.

14. தம்பலகமம் பற்றவெளியில் உள்ள மந்தண்டைக்கீத்து என்றழைக்கப்படும் ஒருதுண்டு வயல் தரை எல்லை வடக்கு இதரம் பள்ளம் என்றழைக்கப்படும் கோயில் வயல் தெற்கு சிறுபயனி கிழக்கு கோயில் சூகர வேட்டை (சூரசங் கார வேட்டை) த்தரை ஆமற்கு கரையான் வெட்டுக்காடு.

15. தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் இதரமள்ளி என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை கிழக்கு இலந்தையடி வயல் என்னும் கோயில் வயல் தெற்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல் மேற்கு கோயிலாறு வடக்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல்.

16. தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் மூத்தார் என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை வடக்கு சின்னவிக்கும் மறு பெருக்குமரிய தோட்டம் கிழக்கு விளங்கண் குடா என்னும் வயல் தெற்கு ஆறு மேற்கு சுவாந்தி அலவரையும் ஆறும்.

17. தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் உள்ள ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்கள்.

18. தம்பலகமம் கோயில் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும்.
19. தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும் எல்லை வடக்கு பிறப்பாகைத் தரை கிழக்கு ஒழுங்கை மேற்கு ஆறு.
20. தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டுத்தரையும் அதிலிருக்கும் தென்னம் மரங்கள் முதலியவான பயிர்களும்.
21. தம்பலகமம் பண்டாரவெளியிலிருக்கும் ஒரு துண்டு தரையும் அதற்கு சேர்மானமான சகல உரித்துக்களும் எல்லை வடக்குவழி தெற்கு மணல் பகுதி பெரிய பகுதி மேற்கு ஆறு கிழக்கு பிறபாகை வயலும் கட்டாடிக் கீத்தும்.

(மேலே சொல்லப்பட்டிருக்கின்ற தோம்புப் பதிவுகளின் படி திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் கோயிலுக்கு 6600 ஏக்கர் வயல் விளை நிலமும் 181 X 215 பாகம் தென்னந்தோட்டமும் தேவதானமாக இருந்து வந்தமையை அண்ணளவாக கணக்கீடு செய்து கொள்ள முடிகின்றது. இவற்றுள் பெருமளவிலான நிலப்பரப்பிற்கு கந்தளாய்க் குளத்தின் நீர்ப்பாசன வலைப்பின்னலுக்குட்பட்ட பாசனக் கால்வாய் களூடாகவே அதாவது குளக் கோட்டன் நிர்மாணித்த நீர்ப்பாசனவியல் நுட்பத்தின் பிரகாரமே பாசனம் பெற்றது என்பதும் ஆய்வாளர் முடிவாகும்.

தோம்புப் பதிவில் இடம்பெற்றுள்ள திருகோணமலை மாவட்டத்திலுள்ள சில இடப்பெயர்கள்

1. தம்பலகாமம் நாய்மார்திடல்
2. தம்பலகாமம் கரைச்சித்திடல்
3. தம்பலகாமம் கூட்டாம்புள்ளி
4. தம்பலகாமம் பட்டிமேடு கோணமலை
5. தம்பலகாமம் கள்ளிமேடு காறிக்குடி
6. தம்பலகாமம் குச்சியம்படுதிடல்
7. தம்பலகாமம் வண்ணாமேட்டுத்திடல்
8. கொட்டியாரப் பற்றுக்குச் சேர்ந்த கீச்சிலம் பற்றை
9. கோறளைப் பற்றுக் கதிரவெளி
10. திருக்கொட்டியாரப்பற்று மல்லிகைத் தீவு
11. கொட்டியாரப்பற்று கங்குவேலி
12. கொட்டியாரப் பற்று சம்பூர்

**பேரரசப் பல்லவர் காலத்துத் திருக்கோணேஸ் வரம்**

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி உட்பட பல வரலாற்று ஆசிரியர்களால் பல்லவர் காலப் பக்தி இயக்கப் பின்னணியில் திருக்கோணேஸ்வரம் பெற்றிருந்த முக்கியத்துவம் நன்கு ஆராயப் பட்டுள்ளது. செல்லத்துரை குணசிங்கம் தனது கோணேஸ்வரம் என்ற நூலில் பல்லவர் காலத் தொடர்புகளை நன்கு ஆராய்ந்துள்ளனர். இருப்பினும் பல்லவர் காலச் சமூக பொருளாதார உருவாக்கப் பின்னணியில் காஞ்சி (கச்சி) ஆராயப்பட்டது போன்று திரு கோணமலை இன்னும் ஆராயப்படவில்லை என்றே கூறவேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் எண்ணிக்கையில் அதிக மாகக் காணப்படும் பத்திரகாளி அல்லது மகிஜமர்த்தினி கோவில்கள், அவற்றோடு இணைந்திருக்கும் பல்லவ சோழ கல் வெட்டுக்கள் போன்றன அக்காலச் சமூக பொருளாதார உறவுகளை அறிவதற்குரிய சான்றாதாரங்களாகின்றன. ஈழத்தில் வெளிப்படுத்தப்பட்ட பெருமளவிலான பல்லவ கிரந்தக் கல்வெட்டுக்களும், வடமொழிக் கல்வெட்டுக்களும் திரு கோணமலை மாவட்டத்தில் இருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும். இது பல்லவ வம்சத்திற்கும் திருக்கோணேஸ்வரத்திற் கும் இடையே இருந்திருக்கக்கூடிய மிக நெருக்கமான பண்பாட்டு அரசியல் தொடர்பு

களையே இனங்காட்டுவதாகக் கொள்ள வைக்கின்றது. பல்லவர் காலத்தில் பாடல் பெற்ற தலச்சிறப்புக்களின் பின்னணியில் வாணிபப் பண்டங்களின் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மையை நோக்கும்போது அங்கு சமுத்திரவியல் வழிவந்த பண்பாட்டுச் செல்வாக்கினை நாம் அவதானிக்க முடிகின்றது. இதன் நிமித்தம் அவை பெருமளவுக்கு கடற்கரைக் கோயில்களாக அமைவதற்கும் காரணமாயிற்று. தம்பலகாமம் கோணநாதேஸ்வரப் பதியம் இத்தன்மைக்கு விதி விலக்கல்ல.

**பல்லவர், சோழப் பேரரசர் காலத்தின் பின் திருக்கோணேஸ்வரத்தில் கருமம் ஆற்றிய கோவில் நிர்வாகிகள்**

''...கோயிற் பூசை, உற்சவம் திருப்பணி போன்ற சகல காரியங்களுக்கென்றும் எம்முன்னோர் சாசனம் எழுதிக் கொடுக்கப் பெற்றவர் ஆகையாலும் குறித்த கோவிலின் கல்வெட்டிலும் வேதம், ஆகமம், புராணம் ஆகியவற்றிலும் சொல்லியபடியும் வழமைப்படியும் கோவிலின் ''தொண்டு தொழும்பு'' செய்த நிர்வாகிகளின் பெயர் கடமை விபரங்கள் போன்றவற்றை தோம்புப் பதிவுகள் இன்று தந்துதவுகின்றன. போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப்பெற்ற கலையழிவுக் கொள்கைக்குப் பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோயிலைப் பற்றிய அரிய தகவல்கள் குறிப்பாக தம்பலகமம் சிவன் கோயிலைப் பற்றியதும் தேவஸ்தான வயல்நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஓலைச்சுவடிகள் பலவற்றில் எழுதிப்பாதுகாக்கப்பட்டிருந்தன. அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவுகளாக முத்திரை குத்திப் பாதுகாக்கப் பட்டிருந்தன. இவற்றில் இடம் பெற்றுள்ள சொற்பதங்கள் அதிகாரிகளின் பெயர்கள் ஆவணத்தின் உள்ளடக்கம் போன்றன பல்லவ - சோழ அரசர்களின் தேவஸ்தானக் கொடைகளில் இடம்பெற்றுள்ளவாறு அதே வகையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மை மேலும் ஆய்வுக்குரிய பொருளாகின்றது.

''திருக்கோணாத மலையைச் சேர்ந்த தம்பலகாமக் கோயிற் குடியிருப்பில் சைவசமயப் பிரபல்யமாய் விளங்கும் கோணநாதேஷ்வர சுவாமி கோவிலுக்கு சூரிய - சந்திர - அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரிய குலத்து மனுநீதிச் சோழ மஹாராசன் மரபிலுதித்த வரராம தேவராசாவின் புத்திரன் குளக்கோட்டு மஹாராசன் மரபிலுதித்த கயவாகு மஹாராசாவினால் ...'' செப்பேட்டு சாசனம் வரையப்பட்டு இக்கோவிலின் நிர்வாக ஒழுங்கு முறைகள் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டன. இவ்வாறு தாமிரசாசனம் செய்து வைக்கப்பட்டதன் பிரகாரம் கோயிற் பணிகளும், பணியாளனர் நியமனமும், பொறுப்புக்களும் இக்கோவிலின் பிரதான நிர்வாகியான "இருபாகை முதன்மை" யினால் மேற்கொள்ளப்பட்டது.

இக்கோவிலின் நிர்வாகிகளுள் "இருபாகை முதன்மை'' என்ற பதவி மிகவும் அதிகாரம் மிக்கதாகக் காணப்படுகின்றது. பொதுவாக ''இராசகுலகுரு'' என்ற ஸ்தானத்தினை வகிப்பவரே இக்கோவிலின் இருபாகை முதன்மையாக விளங்குவார். பல்லவ சோழக்கோயிற் கல்வெட்டுக்களில் இப்பதப் பிரயோகம் பொதுமையானதாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. கரணம், அமப்பற்தானந்தர், வரப்பத்தார், சங்கமம். சிந்துநாடு போன்ற நிர்வாக நிலைகளாகும். இத்தோடு சேர்ந்த இன்னொரு நிர்வாக நிலை "கட்டுக்குளப்பகுதி" என அழைக்கப்பட்டது. கோவிற் பலிசாளர்களுள் கட்டுக்குளப்பகுதி என்னும் நிர்வாகத் துறையானது சோழர் காலத்து ஏரிவாரியப் பெருமக்களது பணியைப் போன்று தொழிற்பட்டது எனக் குறிப்பிடலாம்.

கோவிலின் முதன்மை நிர்வாகியான "இருபாகை முதன்மை'' தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காகத் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ்க்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை நியமித்தும் அதிகாரங்களை வழங்கியும் அவ்வடிப்படையில் தேவஸ்தானத்திற்குரிய ஆதனங்களை வழங்கி

யும் அ தொழிற்பட்டிருந்தார் என்பதை அறியமுடிகின்றது.

அவ்வாறு தொழிற்பட்ட உத்தியோகத்தர்களுள் சிலர் பூசகர், போதகாசாரியார், சாதகாசபரியார், அலங்கிருதாசாரியார், குருமார், பண்டாரம், ஓதுவார் எனக் குறிக்கப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட கோயில் உத்தியோகத்தர் ''இருபாகை முதன்மைக்கு'' தேவையான உதவிகளையும் கடமைகளையும் செப்பமாகச் செய்யாவிடில் அவ்வாறு இருபாகை முதன்மை முடிவு செய்யும் பட்சத்தில் கோவிலின் இருபாகை முதன்மை என்ற நிலையில் மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்குரிய பத்தில் இரண்டு பங்கால், அல்லது குறித்த கோவிலினுடைய பத்தில் எட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது ஆதனங்களை அவர்களிடமிருந்து மீள எடுத்துக்கொள்வதற்கு உரிமை யுடைய வராவார்.

இக்கோவிலின் நிர்வாகம் தொடர்பாகக் குறிக்கப்பட்டுள்ள இன்னொரு முக்கிய அம்சம் ''இருப்பு வீடுகள்'' ஆகும். குறித்த கோவில் களிடமாக "இருப்பு வீடுகள்" கட்டி அந்தந்தக் கோவில்களின் சகல சம்பத்துக்களையும் அந்தந்த கோவில் களுக்குரிய சாசனங்கள் தாமிரப் பட்டயங்கள் உறுதிகள் போன்றவற்றை அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்க வேண்டியது. குறித்த வீடுகளுக்குள்ள இரண்டு திறப்புக்களில் ஒன்று இருபாகை முதன்மையிடமும் மற்றது ஒருமித்து நியமிக்கும் ஒருவரிடமும் இருக்க வேண்டியது குறித்த கோவில்களின் நேர்க்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியனவைகளும் இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோயிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றுக்காகச் செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டு வஷ்திரங்கள், திருவாசி முதலியன சகலமும் மற்றும் தட்டு முட்டுச் சாமான்கள் சகலமும் கோயிலின் இருப்பு வீட்டில் வைக்கும்படி செய்ய வேண்டும். இவ்வாறு இருப்பு வீட்டின் முக்கியத்துவம் கோயில் நிர்வாக முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். இத்தகைய ஒரு செயன் முறையை மத்திய காலத்து வழமைப் பிரகாரம் அண்மைக்காலம் வரைக்கும் பின்பற்றப்பட்டு வந்திருந்தமையைக் காண்கின் றோம்.

**நிலம், சொத்துக்கள், அசைவற்ற ஆதனங் கள்**

பின்னாற் சொல்லப்படும் ஆதனங்கள் திருக்கோணதமலை தம்பலகமப்பற்று, தம்பலகமம் திருக்கோணநாதேஸ்வரர் சுவாமி கோவிலாதனமாக அக்கோவிலின் ஏகபூசகரும், இருபான்மையும் என்னும் அதிகார முறைப்படி உரிமை மாட்சி பெற்ற ஆதனங்களாகும். அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

தம்பலகமப்பற்று மாக்கை வெளியிலிருக்கும் பெத்தராசிவயல், பெரிய ஆண்டிவெட்டுவன் வயல், சின்னண்டிவெட்டுவான் வயல், காட்டுக் குடும்பியன் வயல், பெரிய வெட்டுக்காட்டு வயல், முதலியார் வயல், தம்பலகமப்பற்று பெற்ற வெளியிலிருக்கும் ஒலுக்குணி வயல். கரையான் வெட்டுக்காட்டு வயல், சுவாந்தியார் வயல், மந்தணடைக் கீத்து வயல், கரையான் வயல், தம்பலகமப் பற்றுபண்டார வெளியிலிருக்கும் கொண்டு முனை வயல், பிராமணன் கீத்து வயல், உப்புக்குழி வயல், மூத்தார் வயல், மாதோட்டியான் வயல், சின்ன அணைவெட்டுவான் பெரிய அணைவெட்டுவான் வயல், பிரம்மபுரு காட்டுக்கீத்து வயல், தெளவில் வெட்டுவான் வயல், தம்பலகமப்பற்று சம்பாந்துறையில் உள்ள பெருந்தரையும் அதில் உள்ள தென்னை மரங்கள், தென்னம்பிள்ளைகள் முதலிய வான்பயிர்கள், தம்பலகமப்பற்று பண்டார வெளியிலிருக்கும் ஒரு துண்டுத் தரையும் அதற்குச்சேர்மானமானசகலஉரித்துக்களும் ஆக ஏறத்தாழ 6600 ஏக்கர் நெல் வயல் விளைநிலமும்

*181 x 215* பாகம் பரப்புடைய தென்னந் தோட்டமும் தேவதானமாக ஆங்கிலேயர் காலம் வரைக்கும் இருந்து வந்தமையை தோம்புகளினூடாக அறிகின்றோம். இவை யாவும் கந்தளாய்க் குளத்தின் நேரடியான பாசனமுறைக்குட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் கோணநாதேஸ்வரப் பதிக்கும் பெரும் நீர்ப்பாசன நிறுவனங்களின் மீதான சொத்துடமை இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கந்தளாய்க் குளத்திலும், மகாமகக் குளத்திலும் காலத்திற்குக் காலம் நடைபெற்ற வேள்விகள், ஆடி அமாவாசைத் தீர்த்தங்களின் மூலமும் அங்கு நடைபெற்ற யாகங்கள் மூலமும் கிராமசாந்திகள் மூலமும் பெருந்தொகையான வருமானம் கிடைத்தமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஆலடிப்பத்தினியம்மன் கோவிலின் வேள்விகள் மூலம்பெற்றவருமானமும்கோணநாதேஸ்வரப் பதிக்கே சென்றடைந்தது. திருகோணாதமலை கொட்டியாரப் பற்றில் உள்ள கங்குவேலி சிவன்கோவில், வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் ஆகியவற்றின் பூசை, திருவிழாக்கள், ஆடி அமாவாசைத் தீர்த்தங்கள் ஆதற்குரிய கிருத்தியங்கள் மூலம் பெற்றுக்கொண்ட வருமானமும் கோணேஸ் வரப் பதியையே சென்றடைந்தது. மேலும் கந்தளாய்ப் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவுள்ள - அசைவற்ற ஆதனங்களின் வருமானமும் அப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.

**கோயிற் குடியிருப்புக்கள்**

தம்பலகாமப் பற்றைச் சேர்ந்த நாய்மார் திடல், கரைச்சித்திடல், கூட்டாம்புளியடி, பட்டுமேடு, கோணமலை, கள்ளிமேடு - காறிக்குடி, குச்சியம் படுதிடல், வண்ணா மேட்டுத்திடல், கொட்டியாரப் பற்றைச் சொந்த கீச்சிலம் பற்றை, கங்குவேலி, சம்பூர், கோறளைப் பற்றைச் சேர்ந்த கதிரவெளி திருக்கொட்டியாரப் பற்றைச் சேர்ந்த மல்லிகைத்தீவு ஆகியன அதிக்கோண நாதேஸ்வரா கோவிலுக்குரிய பிரதான கோயிற் குடியிருப்புக்களாக விளங்கின. இக்கோயிற் குடியிருப்புக்களுக்குரிய தொழும்பாளர்களாக ஈரங்கொல்லி (திருக்குளக்கட்டாடி) பரியாரி, பண்டாரம், கந்தியடப்பன், மதிரிப்பணிக்கள், சங்கமம், தோம்புதோர், ஆகியோர் சேவை புரிந்தனர். ஆதிக்கோணநாதேஸ்வரர் திருக்கோவிலின் திருப்பட்டாடை உற்பத்தியை கந்தியடப்பர் அல்லது செங்குந்தர் (சேணியர்) என்ற குல மக்களே மேற்கொண்டிருந்தனர்.

**முடிவுரை**

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவிலின் தோற்றம் வளர்ச்சி, நிலம், சொத்துக்கள், வருமானம், பரிபாலன முறைகள் தொடர்பான சில அடிப்படை ஆய்வுக் குறிப்புக்களை ஆதிப்பல்லவ வம்ச மரபு ஒன்றுடன் இணைத்த வகையில் இங்கு நிரைப்படுத்த முடிந்தது. தோம்புக் குறிப்புக்களில் இக்கோவிலைப் பற்றிய மேலதிக விபரங்கள் இன்னும் காணப்படுகின்றன. இக்கோவிலைப் பராமரிப்பதற்காக ஒரு சபை உருவாக்கப்பட்டிருந்தது. அச்சபையில் *33* ஊர்களைச் சேர்ந்த *33* உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தனர். அவர்களது விபரங்கள், கடமைகள்கூட தோம்பில்பதிவுசெய்யப்பட்டுக் காணப்படுகிறது. இவை மாத்திரமன்றி, திருகோணமலை கோணநாதேஸ்வரப் பெருமானின் பட்டித்தொகுதியில் வளர்க்கப்பட்டு வந்த மாடுகளின் இனம், பெயர்கள், குறியீடுகள் போன்றனவும் விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளமையும் நன்கு ஆராயத்தக்கது. இச்சிறு ஆய்வுக் கட்டுரையின் கண் அவற்றை விபரமாகக் கொடுக்க முடியாதிருக்கின்றது. ஏற்கனவே சோழர் காலத்தில் இந்த இந்துக்கோயில் நிர்வாகம் தொடர்பாக செ. குணசிங்கம் மிகவும் விபரமாக ஆராய்ந்துள்ளார். இங்கே சொல்லப்பட்ட தகவல்கள் ஆய்வாளர்களுக்கு இப்பொழுது தான் முதன்முறையாகக் கிடைக்கின்றது எனலாம். இவ்வகையில் இக்கட்டுரையின் நோக்கம் இக்கோவிலைப்

பற்றிய தோற்றம் தொடர்பாக எதிர்கால ஆய்விற்கு ஆய்வாளர்களை வழிநடத்திச் செல்வதே எனலாம். திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவில் பற்றிய அரிய தகவல்கள் இன்னும் தம்பசிட்டி வியாபாரி மூலையில் மறைந்து காணப் படுகின்றன. வியாபாரி மூலைக்கும் தம்பலகாமம் ஆதிக்கோணநாதேஸ்வரர் கோவிலுக்குமிடையே காணப்பட்டிருக்கக் கூடிய ஆதிப்பல்லவ வம்சத் தொடர்புகளை உரியமுறையில் ஆராய்ந்து, அவற்றையும் சேகரித்துப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் கோணநாதேஸ்வரர் கோவிலின் வரலாற்றை முழுமையாக வரைந்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டும் என எதிர்பார்க்கலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. Ramachchandra Dikshitar, V.R (Trand) **The Silappadikaram**, Introduction: pp 01 - 74 : Oxford Uni. Press, 1939
2. Devakunjari, D., **Madurai through the ages**, pub.by SHAER, Madras, 1979.
3. Draniyagala, S.U., **The prehistory of Sri Lanka, Part I**, Pub by the department of Archacological Sruvey of Sri Lanka, Part I, Pub by the depatment of Archacological Survey of Sri Lanka, Colombo - 1992
4. Gunasingam,S,. **The Tamils and Trincomalee**, Peradeniya, 1979
5. Xavier, J.T., The land of leteer, Trincomalee, 1977
6. Navaratnam, C.S., **Tamils and Ceylon**, Jaffna, 1958
7. தோம்புக் கட்டுத் தொகுதி: வியாபாரிமூலையில் வாழ்ந்த அமரர் சி.நா.சொக்கநாதபிள்ளை அவர்களின் சேகரிப்புக்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றுத் தகவல்கள்.
8. மோஸஸ் பொன்னையா., நாடார் வரலாறு. சீயோன் பதிப்பகம், மதுரை. 1978.
9. பல்லவராசசேகரன், பல்லவராச்சியம், ஈழத்து இலக்கியச்சோலை. திருகோணமலை. 2007
10. கிருஸ்ணராசா. செ. தொல்லியலும் வடமராட்சியும் பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு. கோண்டாவில். 2015.
11. குணசிங்கம், செ., கோணேஸ்வரம், பேராதனை, 1973.
12. வேலுப்பிள்ளை, ஆ., திருகோமலைத் தமிழ் மந்திரமாலை திருவுடையாள், பிரதேசமலர் - 04. பிரதேச செயலகம், வடமராட்சி - தெற்கு - மேற்கு, கரவெட்டி, 2013.